தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ௵ மாசி ௴ 28 ௳ (11-3-'23.) | ப. 44.

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 449
2. வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள் ... 450
[K. R. R. சாஸ்திரி, M. A. F· R. Econ. S.]
3. நூர்ஜகான் ... 451
4. புயற் காற்று ... 452
V. [நாராயணையர், M.A., M·L.,]

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன், M. A.

சந்தா விவரம் :—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

உலக நடை

'சமீபத்தில் பார்லிமெண்ட் சபையில் சிற்றரசர் பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றி விவாதம் நடந்தது. இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கவர்ன்மெண்டார் கருதி, மசோதாவாய் இந்திய சட்ட சபைகள் இரண்டிலும் கொண்டு வந்தபோது இரு சபையோரும் ஒரே மனதாய் இது கூடாது என்று அபிப்பிராயப்பட்டனர். ஏனெனில், தற்காலத்தில் நடைபெறும் சட்டங்கள் போதும் இந்த சிற்றரசர்களைக் காப்பதற்கு; இதைச் சட்டமாக்கினால் சிற்றரசர் செய்யும் கேடுகளை பத்திரிகைகளிலும் வேறு உபந்நியாசங்களிலும் எடுத்து உரைப்பவர் வாயைக் கட்டுவதாகும் ; அவ்விதம் அநீதி பொருந்திய சட்டத்தைத் தருகிறேன் என்று சிற்றரசருக்கு கவர்ன்மெண்டார் வாக்குக் கொடுப்பது பிசகு; அப்படிக் கொடுத்தாலும் அதை சபையார் அங்கீகாரம் பண்ண இடமில்லை. இவ்வித காரணங்கள் பல கொண்டு கூடாது என்று இரு சபையோரும் அபிப்பிராயப்பட்டும், இந்தியாவின் அமைதிக்கும், நன்மைக்கும் அவசியம் வேண்டுமென்று தோன்றினால் இராஜப்பிரதிநிதி அவர்கள் இருசபையோருடைய இஷ்டத்திற்கு விரோதமாயினும் அவர்களால் தள்ளப்பட்ட மசோதாவைச் சட்டபாக்கலாம் என்றஅதிகாரம் இந்தியா பரிபாலன சட்டத்தில் (Government of India Act) கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விசேஷ அதிகாரத்தைச் செலுத்தி இராஜப்பிரதிநிதி அவர்கள், தள்ளப்பட்ட அந்த மசோதாவைச் சட்டமாக்கினார் ; இவ்வித விசேஷ அதிகாரத்தை சரிவர செலுத்த வேண்டும், அதிகாரம் செலுத்தியதும் மசோதா சட்டமாகாது; ஆறு மாதங்கள் காத்திருக்க வேண்டும். பார்லிமெண்டார் அதைப்பற்றிப் பேசி பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் அதை மாற்றுவதற்கு அவகாசம் வேண்டும் என்று ஏற்படுத்தியிருப்பதால், கேடு ஒன்றும் ஏற்படாது என்று கருதினர் சிலர்; அதுபோல இந்தச் சட்டத்தைப்பற்றி பார்லிமெண்ட் சபையில் சில ஆங்கிலேயர் அநுகூலமாய் பேசினர்; என்றாலும், இந்தியா மந்திரி அவர்கள் இராஜப்பிரதிநிதி செய்ததை ஏற்றுக்கொண்டு சபையோரிடம்: உங்களுக்கு உண்மை தெரியாது; இந்தியாவிலுள்ள சிற்றரசர்களிடமிருந்து பணம் கழற்றுவதற்காக சிலர் அவர்களைப்பற்றி அவதூறுகள் பேசுகின்றனர்; அவர்களை தண்டிப்பதற்கு சாதாரணச் சட்டங்கள் போதாதாயிருக்கின்றன. அவர்களுக்குச் சொத்து இல்லை; பெரும்பாலரும் ஜயிலுக்குப் போகத் தயாராக இருக்கும் 'காலாடி'களாய் இருக்கிறார்கள்; ஆகையால். அவர்களைப் பேசவொட்டாது தடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். பிறகு அவர் சொன்ன சில வார்

சென்னை ஜார்ஜ் டவுன் ஸ்டிரிங்கர்ஸ் தெரு, டையமெண்டு அச்சுக்கூடத்தில்
ஆர். வெங்கிடாசலம் செட்டியாரால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

திகள் கவனிக்கத்தக்கன. இராஜப்பிரதிநிதி அவர்கள் அரச முறையிலும் சட்ட வழியிலும் சிறந்த அநுபவம் உடையவர்; இந்தியாவிலுள்ள சட்ட சபைகளோ நேற்றுப் பிறந்தவை; அநுபவம் இல்லாதவை; அவைகளின் நடத்தையை அங்கீகரித்து இராஜப்பிரதிநிதியாரின் அதிகாரத்தைக் கண்டிப்பது சரியன்று. மேலும் இச்சிற்றரசர் பெரும்பாலரும் சென்ற மகா யுத்தத்தில் பெரிதும் உபகரித்தனர். அவர்களைக் காப்பாற்றுதல் செய்நன்றியும் கடமையுமாம். என்றனராம். இங்கு இரண்டு விஷயங்கள் குறிப்பிடத்தக்கன. (1) இந்தியா மந்திரி சொன்ன காரணம் சரியென்றால் இராஜப்பிரதிநிதி சட்டசபை இரண்டையும் மீறிச் சட்டமாக்கும் விதிகளில் எதையும் பார்லிமெண்ட் சபையாரோ இந்தியா மந்திரியாரோ விலக்குவதற்கு ஹேது கிடையாது; இந்திய சட்ட சபைகளை நேற்றுப் பிறந்தவை என்று அவமதித்தால் அவைகளுக்கு என்ன கௌரவம் ஜனங்கள் காட்டக்கூடும்; ஜனங்கள் தேர்ந்தெடுத்த சபையோரை அவமதித்தால் ஜனங்களை இகழ்ந்ததாகுமே. (2) இந்திய அரசர் மட்டுந்தான் மஹா யுத்தத்தில் உதவினரோ; இந்திய மகா ஜனங்கள் உதவவில்லையோ? ஹார்டிஞ்ச் பிரபு அவர்கள் சொன்ன பேச்சையும் பிறகு மற்ற மந்திரிகள் ஏற்றுக் கொண்டதையும், இப்பொழுதிருக்கும் இந்தியா மந்திரி அறியாரோ? சிற்றரசர்களை மட்டும் காப்பாற்றுவதற்கு விசேஷச் சட்டம் வேண்டுமோ? மற்ற தனவந்தர்களை அவதூறுகள் பேசி பணம் கழற்ற முபலும் ஜனங்களைத் தண்டிப்பதற்கு இருக்கும் சட்டங்கள் போதாவோ, இந்த சிற்றரசர்களை இகழ்வோரைத் தண்டிப்பதற்கும்?

வட இந்தியாவிலுள்ள சில புண்ய க்ஷேத்திரங்கள்.

IV. ஸ்ரீ காசி.

K. R. R. சாஸ்திரி M. A. F. R. Econs. S.

ஸ்ரீ விச்வநாத், ஸ்ரீலோகநாத், ஸ்ரீதீனநாத் என்ற பேரொளி எங்கும் ப்ரதிபலிக்கிறது. "வேதஸார சிவ ஸ்தோத்ரம்" என்ற அரிய கிரந்தத்தில் ஸ்ரீ சங்கரர் "கௌரீபதி"யைப் பற்றி பாடிய பொழுது, ஸ்ரீகாசி விச்வநாதரையே த்யானம் செய்தார். இனி ஜன்மம் கிடையாது என்ற பேரவாவுடன் ஹிந்துவாகிய ஒவ்வொருவனும் பரகதி யடையப்போகுமிட மிதுவே.

ரெயில் பாலத்திலிருந்து தோற்றம்.

காசிக்கருகாமையிலுள்ள ரெயில் பாலத்திலிருந்து உற்று நோக்குமிடத்து எங்கு பார்த்தாலும் தங்க ஸ்தூபிகளும், மொகலாயருள் வெகு க்ரூரமான அவுரங்கஸீபது பள்ளி வாசலும், அழகிய நேபாளி கோயிலென்ன, ஜெயினர் ஸ்தூபியென்ன, இவையெல்லாம் நீல நிறமுள்ள கங்கா ஜலத்தின் கரையில் ஒளியிடுகின்றன. இவ்வளவழகிய தோற்றம் யான் எங்கும் கண்டதில்லை.

ஸ்ரீ காசிக்குள் நுழைதல்.

நம் முன்னோர் நாட்களில் காசி போய்வர 6 மாதமாகும். என் மூதாதையிலொருவர் பாதசாரியாகவே போய் வந்ததற்கு ஏழு மாதகாலம் பிடித்ததென்றார். இப்பொழுதோ, காலம், தூரம் இவ்விரண்டையும் ஜெயிப்பதற்கு இருப்புப்பாதை வந்தாய் விட்டது. பகவத் கீதையில் நாம் படித்திருக்கிற "வீர்யவானான காசிராஜன்" தலைமுறையில் ராஜா வென்ற பட்டத்துடன் ஒருவர் ராம் நகரிலிருக்கிறார். கண்டோன்மெண்டு ஸ்டேஷனுக் கருகாமையிலுள்ள பாதைகளில் புழுதிக் கோரளவில்லை. புதிதாயுள்ள "எக்கா" என்ற விசித்திரமான வண்டியைப் பார்க்கிறோம். வெகு புராதனமானதும், காற்றோட்ட மில்லாததாயுமுள்ள ஓட்டுக் கட்டடங்கள் தென்படுகின்றன. மூன்று அல்லது நான்கு மேடைகளுள்ள வீடுகள் அங்கு மிங்குமிருந்த போதிலும் காசியிலுள்ள வீதியினகலம் சுமார் 4 அடி யிருக்கலாம்.

கங்கா தர்சனம்.

பகீரத ப்ரயத்னம் செய்து இப்பூவுலகிற்கு கொண்டு வந்த கங்கா நதியினருகில் வந்து விட்டோம். படகில் கங்கா நதியில் வாரணாசி என்று சொல்லும் எல்லைக்குள் பிரயாணம் செய்தோமானால்தான் ஸ்ரீ காசியின் பெருமை விளங்கும். க்வாலியர் மஹாராஜா வெகு ஆவலுடன் எத்தனையோ லக்ஷங்களைச் சிலவு செய்தும் அவரது காட் (ஸ்நான கட்டடம்) இடிந்து விழுந்திருக்கிறது; இது ஒரு ஞானியின் சாபமென்று சொல்பவருமுண்டு. நாகபூரது அழகிய காட் பார்க்கிறோம். மஹாஸ்மசானமத்தி யென்று ஸங்கல்பம் சொல்லப்படும் மணிகர்ணிகா கட்டம் போகிறோம். இதனருகிற்றான் ஸ்மசான மிருக்கிறது. 3 மணி சாவகாசத்தில் 15 ப்ரேதங்கள் வரை தகனத்திற்காக வருவதை நான் கண்டேன். ஹரிச்சந்திரன் ஸத்யத்திற்காக சுடலை காத்த காலந்தொட்டு இத்தகனக்ரியை இவ்விடம் நடைபெறுகிறதென்பதையும் தகனமானவுடன் ஸஞ்சயனம் கங்கா நதியிலேயே, உடனுக்குடன் நடப்பதையும் உற்று நோக்குமிடத்து கங்கா நதியின் விசேஷ குணம் உலகினுக்கெல்லாம் விளங்கும். அழுகுரலை நான் கேட்கவேயில்லை. முக்தி யடையும்பொழுது அழுவானேன்?

காசி விச்வநாதர் தரிசனம்.

ஸங்கல்ப ஸ்நானத்திற்குப் பிறகு, புஷ்பம், கங்காஜலம் இவை ஸஹிதம் சௌக்கிலுள்ள விச்வேஸ்வரர் கோயில் போகிறோம். மிகவும் நெருக்கடியான தெருக்கள் மூலம் இண்டூர் ராணியான அஹல்யாபாய் கட்டிய விச்வேச்வரர் கோயிலுக்குட் செல்லுகிறோம். விச்வநாதர் கோயில் பெரிதாயிருக்குமென்று எண்ணிப்போனதில், மிகவும் நெருக்கடியானதென்றறியலாயிற்று. இக்கோயிலிலுள்ள ஸ்தூபிகளைத் தங்கப் பூச்சு கொடுத்தவர் காலஞ்சென்ற ரஞ்ஜீத் மஹாராஜாவே. எல்லோரும் வெகு பக்தியுடனே உள்ளே போய் விச்வநாதர் லிங்கத்தைதழுவி, அபிஷேகம், பூஜை முதலியவை நாமே செய்கிறோம். தென்னிந்தியாவில் இவ்வித தரிசனத்தை செய்ய முடியாத நாம் அடையும் ஆனந்தத்திற் கோரளவில்லை.

அவுரங்கஸீபது அக்ரமம்.

இக்கோயிலில் ஒரு புறத்தில் ஆதி விச்வேச்வரர் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்ட லிங்கங்கள் காணப்படுகின்றன. சற்று தூரத்தில்

கோயிலின் தொடர்ச்சியாக ஒரு பள்ளி வாசலைப் பார்க்கிறோம். பள்ளி வாசலிலுள்ள சுவர்களெல்லாம் ஹிந்து கோயிலதே. ஹிந்து மதத்தில் விசேஷத்வேஷம் காட்டிய கொடுங்கோன் மன்னனாகிய அவுரங்கஸீப் இந்த மகாபாதகத்தை செய்தவர். விச்வேச்வரர் கோயிலுக்கும் பள்ளி வாசலுக்கும் மத்தியில் புராதனமான ஞானவாபி என்ற கிணறிருக்கிறது. ஆதி விச்வேச்வரர் லிங்கத்தை இக்கிணறுக்குள் ஒரு குரு எறிந்ததாக ஐதீகம். தவிரவும், பரமசிவனார் காசியில் மஹா க்ஷாமம் வந்த பொழுது, ஒரு முனியின் வேண்டுகோளுக் கிணங்க, இந்த கிணறை தன் சூலாயுதத்தால் வெட்டியதாய் சொல்வது முண்டு.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை.

விச்வநாதர் கோயிலின் தொடர்ச்சியாய் ஒரு பள்ளி வாசலிருப்பதின் காரணமாக அநேக சச்சரவுகளும் உயிர்ச்சேதங்களும் நடந்ததுண்டு. எப்படி மெக்கா முகம்மதியருக்கோ அம்மாதிரியே ஹிந்துக்களுக்கு காசி யென்பதை ஏன் முஸ்லீம்கள் உணரக்கூடாது? சென்ற 10 வருஷமாக ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை எங்கும் பறை சாற்றப்பட்டு வருகையில், முஸ்லீம் ஸகோதரர்கள் காசி கோயில் புராதனமான தென்பதை யுணர்ந்து நடந்து கொள்ளாவிடில் என்னே முகமதியர்கள்?

இதர கோயில்கள்.

விசாலாக்ஷி கோயில் நம் நாட்டுக்கோட்டை நகரத்தாரால் புதிதாய் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அன்னபூர்ணி கோயில், பைரவர் கோயில், துர்கா தேவியின் கோயில், காசி ராஜா முதலிய தனவந்தர் செல்லும் ஜக்கேச்வரர் கோயில் முதலியவையை முக்கியமாய்க் கூறலாம். கயாவுக்குப் போவதற்கு முன், பஞ்சகோச விஸ்தீரணத்திற்குள்ளிருக்கிற பிசாசமோசன குளத்தில் ஸ்நானம் செய்வது வழக்கம்.

காசியின் பெருமை.

நம் புண்ய பூமியில் ஒவ்வொரு கிராமமும் புராண பூர்வமாய் கியாதி பெற்றதாயிருந்தும், காசியை மாத்திரம் முக்தி க்ஷேத்திரமாய்க் கொண்டாடி வருகிறோம். இந்தியாவில் மஹா ப்ரளய காலம் வந்து எல்லாம் முழுகினாலும், காசி யொன்று மாத்திரம் நிலைத்திருந்தாற் போதுமென்று தான் ஹிந்து வாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் கோருகிறான். காசி விச்வநாதரை தரிசித்து ''ஹரி:'' என்ற நாம உச்சரணையுடன் கங்கையில் என் ஆவி விண்ணுலகேகாதா! என்பதே ஒவ்வொரு ஹிந்துவின் பேரவா.

நூர்ஜகான்.

இதுகாறும் நம்முடைய தேசத்தைப்பற்றியும், அதை ஆண்டுவந்த அரசர்களின் பரம்பரைகளையும், அந்நாள் நாகரீகங்கள், கல்வித்திறமை அரசர்களின் கொள்கைகள், குணாதிசயங்கள் இவைகளைப்பற்றியும் அயல் நாட்டினர்களாலேயே பெரும்பான்மையும் நமக்கு கூறப்பட்டு வந்துள்ளன. ஒவ்வொரு இனத்தவர்கள், ஆண்ட நாட்களிலும் நமது தேசத்தின் வன்மையைச் செவியுற்று கண்டு களிக்க வந்த சில ஆங்கிலேயப் பிரயாணிகளால் வரையப்பட்டவைகளையே நாம் ஆதாரமாய்க்கொண்டு எங்ஙனம் நமது அரசர்களைப் பற்றி உண்மையை அறிந்துகொள்வது? முழுவதும் வேறுபாடுள்ள கொள்கைகளுடைய மேல் நாட்டார்கள், நமது மன்னர்களையும், அவர்கள் ஆண்ட தேசங்களையும் பற்றி நன்கு அறிந்து எழுதுவது அசாத்தியமே. அவைகளையே நாமும் ஆதாரமாய்க் கடைபிடித்து நம்மை ஆண்டவர்களின் குணாதிசயங்களை நிச்சயிப்பதும் மதியீனம். இப்பொழுது புதிதாய் வங்காளி ஒருவர் முற்பட்டு மொகலாய ராஜ்யத்தையும் அதை ஆண்ட மொகலாய அரசர்களையும் பற்றி அநேக ஆதாரங்களுடன் அவர்கள் பேன்மையான குணங்களையும் அந் நாட்களில் நடைபெற்ற காரியங்களையும் பற்றி எழுதி, ஜிகாங்கீர்' என்ற பெயருடன் வெளியிட்டிருக்கிறார். அதில் மேன்மை தங்கிய ''மெருனுஸா'' அல்லது ''நூர்ஜகான்'' என்ற ஜிகாங்கீரின் மனையாட்டியைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

''நூர்ஜகான்'' (உலகின் தீபவொளி) என்றுவழங்கப்பட்டு தன் முப்பத்தைந்தாவது பிராயத்திலும் தன் சிறந்த சௌந்தரியத்தை சிறிதேனும் குறையப் பெறாதவளாய், உலகில் கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு அரிய வஸ்துவின் சிறப்பையும் பெற்று, சௌந்தரியத்தின் வடிவமாய் விளங்கலானாள். ஒப்பற்ற பெர்ஷியா தேசத்து அழகுடன் மிருதுவாயும், வசீகரமுமான நீல நிறக்கண்களும் அவளிடம் ஒருங்கே அமைந்திருந்தன. சித்திரத்தில் அம்முழுவழகையும் பிரகாசிக்கும்படியாய் வரைய எண்ணிறந்த சித்திரக்காரர்கள் முயன்று நின்றனர். அவள் பெயரைக் கேட்ட மாத்திரமே நீண்ட மெல்லிய உருவமும், அன்றலர்ந்த தாமரை போன்ற முகமும், அகன்ற நெற்றியும், கம்பீரமான பார்வையும், மெல்லிய சிறந்த உதடுகளும் உடைய ஓர் பெண்ணுருவம் நம் மனக்கண்முன் தோன்றும். அவள் சரீரம் ஆரோக்கியமும், வலிமையும் உற்றது. குதிரைகள் மீதேறி சவாரி செய்தும் வேட்டையாடியும் வருவதுண்டு. அம்புகள் எய்யும்போது அவள் கரங்கள் சிறிதேனும் நடுங்குவதில்லை.

அவளுக்கு கூர்மையான புத்தியையும், சமயத்திற்குகந்த குணங்களையும் ஈசன் அளித்திருந்தான். அத்துடன் கல்விச் செல்வமானது கடவுளால் அளிக்கப்பட்ட வரன்களை மேலும் பிரகாசிக்கச் செய்தது. நூர்ஜகான் பெர்ஷியா பாஷையில் மிகுந்த தேர்ச்சி அடைந்தவள். அவைகளில் கவனம் செய்யும் சக்தியே பெரும் பான்மையும். அவளுக்கு, தன் கணவன் ஹிருதயத்தை கொள்ளை கொள்ள உதவியாய் நின்றது. பெண் பிறப்பின் பெருமையான சில அபூர்வமான பயிற்சிகளும், ஒழுக்கங்களும் நமது ராணியிடம் நிரம்பியிருந்தன. 1613ம் வருடம் ஆக்பர் சக்ரவர்த்தியின் மனைவியான ''ஸலீமாபீகம்'' என்பவர் காலம் செல்லவும், ராஜ்யத்தின் முதன்மை சீமாட்டி என்ற கௌரவப்பட்டமளிக்கப் பெற்று நூதன நாகரீகங்களுக்கு பிறப்பிடமாயும் அந்தபுறத்தின் தலைவியாயும் விளங்கலானாள்.

நூர்ஜகான் தானாகவே பலவிதமான சித்திரவேலைகளையும், புது மாதிரியான ஆபரணங்களையும் அவைகளை அணியும் விதங்களையும் உலகத்திற்கு கற்பிப்பவளாயினள். அவளிடம் உற்பத்தியான ''நூர்மகாலி'' என்று வழங்கிய ஓர் விதஆடை கல்யாணப் பெண்ணையும், மணமகனையும் அலங்கரிக்க இருபத்தைந்து ரூபாய்க்குள் கிடைக்கும்படியான ஓர் ஆடையாய் வழங்கி நின்றது. நூதனமான பக்ஷியங்கள் செய்வதிலும், விருந்துகள்

வைத்து விருந்தினர்களை உபசரிப்பதிலும், அரண்மனையை அலங்கரிப்பதிலும், அவள் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தாள். அவளுக்கு பிற்காலம் "காபிகான்" (Khafi Khan) என்பவர், அவள் காலத்து நாகரீகம் ஓர் நூற்றாண்டுக்குப் பின்னும் சீமாட்டிகளால் கொண்டாடப்பட்டு வந்தது என்று கூறியுள்ளார். எவ்வளவு ஆசைக்காரியாயும், துணிவுசரமாயும் தோன்றினளோ அவ்விதமே அவள் ஹிருதயத்திலும் கருணை வெள்ளம் ததும்பி நின்றது. அநாதை குழந்தைகளுக்கோர் அடைக்கலமாயும், தாயாகவும் அவள் நடந்து வந்தாள். கஷ்டதிசையில் இருந்து வருந்துபவர் யாராயினும் அவர்களை காக்க முன்வந்து நிற்பாள். ஒவ்வொரு தாய் தந்தையற்ற சிறுமிக்கும் அவள் விவாகத்துக்கு வேண்டிய பொருளுதவி செய்துவந்தனள். அவள் ஆண்ட 16 வருஷங்களில் எளியவர்களுக்கு அவள் செய்துவந்த உதவிகள் எண்ணத்திறமல்ல. அவள் ஜீவியகால முழுவதும் பெருந்தன்மையான எண்ணங்களும், ஒருபோதும் பிறழாத தைர்யமும் அவளுக்கு உற்ற துணையாய் நின்றன. எவ்விதம் தன் முழுமனதுடனும் ஜிகாங்கிரை நேசித்தனளோ, அவ்விதமே அவள் பிரிவிலும் கரைகாணு துக்கத்தை பாராட்டி வந்தனள்.

மொகலாய ராஜ்ய முழுவதையும் தன் உள்ளங்கையில் வைத்து சுழற்றிய நாட்களில் தன் ஊக்க முழுவதையும் அதில் செலுத்தி ஆண்டுவந்தாள். ஆனால் அதை இழந்த நாட்களிலோவெனில் முற்றிலும் துறந்த சன்னியாசனியாய் சிறிதேனும் மனச்சோர்வு அடையாமல் தன் வாழ்நாட்களை தனிமையில் கழித்து தன் புகழை உலகெங்கும் பறவச்செய்தனள் ஒவ்வொன்றிலும் மேன்மையுறவேண்டுமென்ற அவள் பேராசை அவள் குணங்களை மேலும் பிரகாசிக்கச்செய்தது அவள் அதிசயிக்கத்தக்க புத்தி. தன் சக்தி முழுவதையும் நன்கு உணர்ந்ததாய் யாவற்றிலும் தானே முன்னேற்ற மடைய ஆவல் கொண்டதாய் நின்றது. ஆனால் இக்குணங்களுடன் நூர்ஜகான் உலக ஒழுக்கத்தை நன்கு அறிந்திருந்தனள்.

ஒவ்வொரு விஷயத்தையும் அறிந்து அதன் சாராம்சத்தை கிரஹிப்பதில் அவளுக்கு ஈடு ஒருவரையும் கூற முடியாது. அவளைக் கண்ட மாத்திரத்தில் எவ்வித இடுக்கண்களும் மறைந்துவிடும் என்பதை அவள் விரோதிகளும் ஒப்புக்கொள்ள கூடியவையாய் இருந்தது. அவள் எக்காரியத்தை மேற்கொள்ளினும் அதில் தன் முழுஊக்கத்தையும் செலுத்தி அதன் வெற்றியிலேயே கண்ணாய் இருப்பாள். எவ்வித ஆபத்து நேரினும் அவள் திடமான மனோதைர்யம் அவளை விட்டு அணுவளவேனும் நழுவுவதில்லை. புறண்டோடும் வெள்ளத்தினூடே ஓர் முரட்டு யானையின்மீது உட்கார்ந்து சரமாரியாய் பொழியும் எதிரிகளின் அம்புகளுக்கும் அவள் பின்வாங்கவில்லை என்றால் அவள் மனவலிமையை அளவிடவும் கூடுமோ? பேர்பெற்றதோர் போர்வீரனால் சிறையிலிடப்பட்டபோதும் அவள் சாமர்த்தியமும், வசிகரிக்கும் தன்மையும் அவளை விட்டகலவில்லை.

அவளுக்கு இயற்கையாய் அமைந்திருந்த துணிவு மகமதியருக்கு ஏற்பட்டுள்ள கோஷாவை புறக்கணித்து தன் கண்களாலேயே யாவற்றையும் கண்ணுற்று ராஜயத்தை வெகு நேர்மையாய் ஆள இடங்கொடுத்தது. அதிரூபலாவண்யமும் சமயோஜிதமான அறிவும், கருணைக்கடலாயும், மிகுந்த ஆசைக்காரியுமான நூர்ஜகானே தன் முதல் கணவன் இறக்க ஜிகாங்கீரால் 1611-ஆண்டு மணம் செய்து கொள்ளப்பட்டாள். எத்தனையோ விதமான குணபேதங்கள் ஒருவருக் கொருவர் இருப்பினும் அவைகளே இருவருக்கு முற்ற குறைவுகளை நிறப்பிக் கொள்ள சாதகமாய் இருந்தன. ஒருவருக் கொருவர் இருந்த குண விசேஷங்களைக் கொண்டே அவர்கள் அன்பும் மேன்மேலும் செழித்தோங்கி வளர்ந்து தழைத்தது. ஜிகாங்கீர், ஒரு போதும் மந்த புத்தியுடையவனல்ல. மந்த புத்தியும் ஈசனால் அளிக்கப்பட்ட வரனாய் இருக்க வேண்டுமே ஒழிய நம்மால் ஸ்வீகரித்தோ, அல்லது அப்பியசித்தோ அடையக் கூடியவையல்லவென்று ஓர் அறிஞர் கூறியிருக்கிறார். தனது 43 பிராயத்திலேயே ஜிகாங்கீர் ராஜ்ய கவலைகளை விட்டு நீங்கி தன் காலத்தை வேடிக்கையாய் செலுத்துபவனாயினன். தன்னை முழுமனதுடன் காதலித்தும், தன் மனம் கோணாது நடந்தும், தன் அபிப்பிராயத்தை தழுவியே ராஜ்யத்தை ஆண்டும், தனக்கு எப்பொழுதும் களிப்பையே அளித்தும் தான், தன் ஆசைக்குகந்தவாறு நேசித்துவரும் ஓர் கட்டழகியிடம் தன் பெருத்த ராஜ்யத்தை ஒப்புவிக்க அரசன் மனம் இசையாதிருக்கவில்லை. வருடங்கள் செல்ல ஜிகாங்கீர் மெள்ள, மெள்ள, தன் ராஜ்ய காரியங்களை விட்டு அகன்றனன். நூர்ஜகானும் மேன் மேலும் தன் செல்வாக்கையும், அனுபவத்தின் பயனாய் ராஜ்யத்தை ஆளும் திறமையையும் பெருக்கிக் கொண்டே வந்தனள். தன் ஆதிக்கியத்தை விருத்தி செய்வதில் போல் வேறொன்றிலும் மனிதர்களுக்குவேகமாய் ருசியுண்டாவதில்லை. வெகு சீக்கிரம், நூர்ஜகான் மொகலாய ராஜ்யமுழுவதையும் தன் சொல்லுக்கு அடிமையாக்கி யாதொரு தடங்கலுமில்லாமல் அதன் தலைவியாய் ஆண்டு வந்தனள் என்பதில் யாதொரு ஆச்சரியமுமில்லை.

நாம் இதுகாறும் நூர்ஜகானை, ஜிகாங்கீர் வெகு காலமாய் நேசித்து வந்ததாயும், அதற்காகவே அவள் கணவனை வஞ்சகமாய் கொலை புரிந்து அவளை மணம் செய்து கொண்டானென்றும் அறிந்து வந்தோம். இதன் மூலமாய் நாம் அறிவது யாதெனில், உலகுக்கோர் ஆபரணமாய் விளங்கிய நூர்ஜகான் தன் கணவனைக் கொன்ற பாதகனை மணந்து கொண்டு தன் முழுமனதுடனும் அவனை நேசிக்க ஓர் அற்ப ஸ்திரீ அல்ல வென்பதே.

புயற் காற்று.

[V. நாராயணையர் M. A, M. L.,]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனர் அவனை ஊருக்குக் கூட்டிச் சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும் போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாண காலத்தில் தன் புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவன் எனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டேர்பாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறு ஒருவர் மனைவி என்றும் அறிந்

ததும், ஹேமநளினியை மறுபடி ஈாடி கல்யாணத்திற்கு உடன்பட்டதும்; யோகேந்திரன் அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று அங்கு இருந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடி கல்யாண ஏற்பாட்டைக் குலைத்ததும்; இராமேசன் கமலாவுடன் கப்பல் மார்க்கமாய் வேறு இடம் நோக்கிச் சென்றதும்; பிரயாணகாலத்தில் ஒரு நாள் இராமேசன் கமலாவுக்கு கதை சொல்லுவது போல் தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லி கமலாவை கலங்கச் செய்ததும், சமையல் வேலைக்கு உதவி புரியும்படி அமர்த்தப்பட்ட உமேசனுடைய பரிதாப நிலையைக் கேட்டு கமலா அவன்பால் கருணை கொண்டதும்; பிறகு அதே கப்பலில் வந்த சக்கிரவர்த்தி "மாமா" என்பவருடன் சிநேகமானதும்; அவருடைய விருப்பத்தின் பேரில் அவரூராகிய காஸிப்பூரில் இராமேசன் வக்கீலாய் அமர்வதென்று தீர்மானித்ததும்; காஸிப்பூர் வருமுன் இராமேசன் அத்தீர்மானத்தை மாற்ற முயன்றதும் கமலா அதற்குச் சம்மதியாது திடமனதாய் இருந்ததும், சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை]

"எங்கே, உமேசா, நீயும் எங்கே புறப்படுகிறாய்" என்று கேட்டான் இராமேசன்.

"நான் அம்மாவுடன் போகிறேன்.

"இராமேசன்: காசி வரைக்கும் போக கப்பல் சீட்டு வாங்கி இருக்கிறேனே; இது காஸிப்பூர் அல்லவா? நாங்கள் காசிக்குப் போகவில்லை, நீ காசிக்குப்போகவேண்டும் என்றாயே?"

"உமேசன்: " நானும் காசிக்குப்போகவில்லை"

உமேசன் இவ்விதம் தன் குடும்பத்தில் ஒருவனாய் விடுவான் என்று இராமேசன் யோசிக்கவேயில்லை. அவன் அவ்வளவு நிச்சயத்துடன் தீர்மானமாய்ச் சொன்னது இராமேசனுக்கு அதிசயமாயிருந்தது.

"அப்படியானால், உமேசனும் நம்முடன் வருகிறானா, என்ன" என்று கமலாவைப் பார்த்துக் கேட்டான் இராமேசன்.

"அவன் வேறு எங்கே போவான், பாவம்"

இராமேசன்: "யாரோ, உறவு காசியில் இருப்பதாகச் சொன்னானே."

கமலா: "நம்முடன் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான், இருக்கட்டுமே." உமேசனைப் பார்த்து "உமேசா, இது புதிய இடம், மாமாவை விடாமல் தொடர்ந்து வா. இல்லாவிட்டால் இந்தச் சந்தடியில் வழி தப்பிப் போவாய்."

எல்லா விஷயங்களிலும் தானே பொறுப்பாய் காரியங்களை நடத்துவது என்று கமலா நிச்சயித்து விட்டாள் என்று இராமேசனுக்குப் புலப்பட்டது. எந்த ஊருக்குப் போய் இருப்பது, யார் யாரைக்கூட்டிப் போவது என்றவை அவளாலேயே தீர்மானிக்கப்பட்டன. இராமேசன் சொன்னவற்றை யெல்லாம் சற்றும் ஆக்ஷேபியாமல் கேட்டு அமர்ந்து நடந்த காலம் மாறிவிட்டது. ஆகவே, உமேசன் தன் சிறு துணிமூட்டையும் கையுமாய் அவர்களுடன் வரலாயிற்று.

ஊருக்கும் ஐரோப்பியர் குடியிருக்கும் இடத்திற்கும் இடையுள்ள விசாலமான பிரதேசத்திலுள்ள பங்களா ஒன்றில் குடியிருந்தார் சக்கிரவர்த்தி மாமா. வீட்டிற்கு முன்புறம் கிணறும், பின்புறம் மாந்தோப்புமிருந்தது. பங்காளாவைச்சூழ, சுவர் எழுப்பப்பட்டிருந்தது. வாசற் புறத்தில் வீட்டு கட்டிடத்திற்கும் இந்தச் சுவருக்கும் இடையுள்ள பூமியில், கிணற்றினின்றும் தண்ணீர் இரைத்துக் காய்கறிகள் பயிரிடப்பட்டிருந்தன. இராமேசனையும் கமலாவையும் வேறு வீடு தேடிக் குடிப்புகும் வரை இங்கே வந்திருக்க வேண்டுமென்று மாமா கட்டாயப்படுத்தினார்.

மாமாவின் மனைவியான ஹரிபாவினியைப்பற்றி மாமா பேசும் போதெல்லாம் "நலுங்கின தேகம் அவள் உடம்பு பலஹீனமாய் இருக்கும்" என்று சொன்னாராயினும், அவளைப் பார்த்தால் அப்படி பலஹீனமாயிருப்பவள் போல் தோன்றவில்லை, அவளுக்கு வயதாயிற்று என்றாலும் அவள் முகம் தளரவில்லை; பலசாலி, சாமர்த்தியசாலி என்றே தோன்றிற்று. தலையில் மட்டும் சற்று நரை தோன்றியிருந்தது. ஆயுர்தேவதை அவள் மீது "டிகிரிக்"கட்டளை வாங்கியிருந்ததை இன்னும் நிறைவேற்றவில்லை போலும்.

வாஸ்தவத்தில், அவளை சக்கிரவர்த்தி மணஞ்செய்து வெகு நாளாகுமுன் மலை சுரத்தால் அவள் வருந்த நேரிடவே, அந்த சுரத்திற்கு வேறு நல்ல ஊருக்குப் போய் வாசிப்பதைத்தவிர மருந்து இல்லை என்று கொண்ட அவளது கணவன் காஸிப்பூரில் ஒரு பள்ளிக்கூட வாத்தியார் உத்தியோகத்தைச் சம்பாதித்து அவ்வூரில் தன் குடும்பத்துடன் வந்து குடியேறினார்.

ஹரிபாவினியின் உடம்பு ஸ்வஸ்தமாய் வெகு காலமாயிற்று என்றாலும், அவர் அவளுடையதேகஸ்திதியைப்பற்றி எடுத்துக் கொண்ட கவலையும் சிரத்தையும் மட்டுப்படவில்லை.

சக்கிரவர்த்தி, தன்னுடன் வந்தவர்களை வெளியறையில் இறுத்தி, தான் மட்டும் தன் மனைவியை அழைத்துவர உட்சென்றார்; அவள் பின் முற்றத்தில் சாமான்களை வெய்யிலில் காயவைத்து விட்டு கோதுமை புடைத்துக் கொண்டு இருந்தாள்.

"இந்தா, இன்று சற்று குளிராய் இருக்கிறதே. கம்பளியை மேலே போர்த்துக் கொள்." என்றார் சக்கிரவர்த்தி அவளைக் கண்டதும்.

ஹரிபாவினி: "நல்ல யோசனை! குளிரா? என் முதுகைப் பாருங்கள், வெய்யிலில் பொசுங்கியிருக்கிறது."

சக்கிரவர்த்தி: "நன்றாயிருக்கிறது; உனக்கு ஒரு குடை கூடவா அகப்படவில்லை; ஒரு குடை வாங்கிக் கொள்ளக் கூடாதா!

ஹரிபாவினி: "சரி, வாங்குகிறது; எங்கே போயிருந்தீர்கள் நீங்கள் இத்தனை நாளாய்? சொல்லுங்கள்."

சக்கிரவர்த்தி: "அது பெரிய கதையன்றோ? விருந்தாய்ச் சிலரைக் கூட்டி வந்திருக்கிறேன். அவர்களை முதலில் கவனித்துவிட்டு, பிறகு சாவகாசமாய் பேசுவோம்"

சக்கிரவர்த்தி புதிய விருந்தைக் கூட்டிவருவது வழக்கமே, இது முதற் தடவையல்ல; ஆயினும் "தம்பதிகள் இருக்க சௌகரியமான இடமில்லையே" என்று ஹரிபாவினி வருத்தப்பட்டாள்.

"முதலில் அவர்களைப் போய்ப்பார். அப்புறம் யோசனை செய்யலாம், அவர்களை எங்கே இருக்கச் செய்வது என்று. சைலா எங்கே?" "அவள் குழந்தை குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறாள்."

இவ்விதம் பேசிக்கொண்டே சக்கிரவர்த்தி கமலாவை தன் மனைவிக்கு அறிவித்தார்; ஹரி

ஹரிபாவினியை கிரமமாய் கமலா நமஸ்கரிக்க, அவளும் கமலாவை ஆசீர்வதித்து தன் கணவனைப் பார்த்து "நம்முடைய 'பிது' வைப்போலேயே இருக்கிறாள் அல்லவா இவளும்" என்று புகழ்ந்தாள். "பிது" அவர்களின் மூத்த குமாரி; அவள் தன் கணவனுடன் அலஹாபாத்தில் வஸித்துக் கொண்டிருந்தாள்.

இப்படிக் கமலாவை "பிது" வுடன் ஒப்பிட்டுப் பேசியது சக்கிரவர்த்திக்கு உள்ளுக்குள் வேடிக்கையாக இருந்தது; வாஸ்தவத்தில் "பிது" வுக்கும் 'கமலாவுக்கும் யாதொரு ஒற்றுமையுமில்லை; ஆனால், வேறு எந்தப் பெண்ணும் தன் மகளின் அழகுக்கும் குணங்களுக்கும் சமமாய் இருக்கமாட்டாள் என்பது ஹரிபாவினியின் கொள்கை; மற்றப் பெண்ணான "சைலஜா" அவர்களோடேயே இருந்ததால் அவளுடன் ஒப்பிடின் உண்மை விளங்கிவிடும் என்று ஹரிபாவினி எப்பொழுதும் தன்னுடன் வசியாது வெளியூரிலிருக்கும் தன் மூத்தமகளுடனேயே யாரையும் ஒப்பிட்டுப் பேசுவது வழக்கம்.

"நீங்கள் வந்ததில் எங்களுக்கு நிரம்ப சந்தோஷம்" என்றாள் ஹரிபாவினி: "ஆனால் உங்களுக்கு இவ்விடம் அவ்வளவு சௌகரியமாக இருக்குமோ என்னவோ? எங்கள் புது வீடு இன்னும் மராமத்தாய் முடியவில்லை. ஆகையால் நாங்கள் எல்லோரும் இந்த "கிக்கடத்திலேயே இருக்க வேண்டியிருக்கிறது." சக்கிரவர்த்திக்கு கடைத் தெருவில் ஒரு சிறு வீடு உண்டு; அதில் 'மராமத்து' நடந்து கொண்டிருந்தது; வாஸ்தவந்தான். இருந்தாலும் அதை ஒருவரும் குடியிருக்க உபயோகப்படுத்த முடியாது; அதை அப்படி உபயோகப்படுத்துவதென்றும் யாரும் உத்தேசிக்கவில்லை.

ஆகவே, சக்கிரவர்த்தி, தன் மனைவி இவ்விதம் கயிறு திரித்ததைக் கேட்டு தனக்குள் நகை கொண்டாரெனினும் அவளைக் காட்டிக் கொடுக்காமல் இருந்தார்; கமலாவைப் பார்த்து "கஷ்டமாயிருக்கிறது என்று நீ குறை கூறுவாய் என்று தோன்றி யிருந்தால் உன்னைக் கூட்டி வந்திருக்க மாட்டேனே" என்று சொல்லி விட்டு தன் மனைவியைப் பார்த்து "சரி, இன்னும் இப்படியே நின்று கொண்டிருக்க வேண்டாம், இந்த வெய்யில் உன் உடம்புக்கு ஒவ்வாது" என்று எச்சரிக்கை செய்த பின், இராமேசனை நாடி வெளிச் சென்றார்.

தன்னுடன் தனியே விடப்பட்ட கமலாவை மேன்மேலும் கேள்விகள் கேட்கத் தொடங்கினாள் ஹரிபாவினி.

"உன் கணவன், என்ன, வக்கீலா? எத்தனை வருஷமாய் வக்கீல் வேலை பார்க்கிறார்? என்ன வருமானம் வரும்? ஓஹோ; இன்னும் வேலை பார்க்கத் தொடங்கவில்லையோ? அப்படியானால் செலவுக்கு என்ன செய்கிறீர்கள். உன் மாமனார் நல்ல சொத்துக்காரராய் இருந்தாரா? சொத்து சேர்த்து வைத்திருக்கிறாரா? என்ன உனக்குத் தெரியாதா? இதென்ன பெண்! உன் புக்ககத்துக் காரரைப்பற்றி ஒன்றும் தெரியாதா? வீட்டுச் செலவிற்கு உன்னிடம் எவ்வளவு ரூபாய் கொடுக்கிறார்? மாமியார் கூட இல்லை, எல்லாக் காரியத்தையும் நீயே பார்க்க வேண்டாமோ, வயது ஆகவில்லையா என்ன? என் பெண் "பிது" வின் புருஷன் சம்பாத்தியத்தை யெல்லாம் அவள் கையில் கொடுத்து விடுவான். அவள் தான் செலவு செய்கிறாள்."

இப்படி மேன்மேலும் கேள்வி கேட்கவே, கமலாவுக்குக் காரியங்களை நிர்வகிக்கத் தெரியவில்லை என்று விளங்கிற்று; தன் கணவனுடைய ஆஸ்தி குடும்பம் இவைகளைப்பற்றிக் கூடத் தெரியாதிருப்பது அதிசயமே என்றும், அதை அறிய முயலாதிருப்பது வெட்கக்கேடு என்றும் உணர்ந்தாள் கமலா. "இதுவரை நேருக்கு நேராய் பிரியத்துடன் இராமேசனிடம் தான் பேசுவதற்கு வாய்க்கவில்லையே; தன் சொந்தக் கணவனைப்பற்றி ஒன்றும் தெரியாதவளாயிருக்கிறேனே" என்று மனம் வருந்தினாள். இவ்விதம் யாருக்கும் இல்லாத அறிவீனம் தாங்கி பயனற்று இருக்கிறதை நினைத்து மனங் கலங்கினாள்.

"எங்கே, உன் கைவளையைக் காட்டு, பார்ப்போம்; தங்கம் மட்டுத் தங்கம் போலிருக்கிறதே? உன் அப்பா உன் கல்யாணத்திற்கு நகைகள் கொடுக்கவில்லையா? அப்பா இல்லையோ! இருந்தாலும் நகைகள் பண்ணிப் போடாமலா புக்ககத்துக்கு அனுப்பினார்கள். உன் புருஷன் ஒரு நகையும் பண்ணவில்லையா, உனக்கு? "பிது"வின் புருஷன் இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை ஏதாவது நகை பண்ணிக்கொண்டே இருப்பான்."

சுமார் இரண்டு வயதுள்ள தன் பெண் "உமை" யைக் கையில் அழைத்துக் கொண்டு உள்ளே வந்த சைலஜாவின் வரவால் இந்தப் பேச்சு தடைபட்டு நின்றது. சைலஜா கருப்பு நிறம்; சிறு வடிவம்; ஆனால் அவளுடைய முகம் உற்சாகம் பொருந்தி அகன்று விசாலமான நெற்றியுடன் பிரகாசித்தது. அவளைப் பார்த்தால் அமரிக்கை குணத்தோடும் நல்ல திட புத்தியோடும் கூடியவளென்று தென்பட்டது.

கமலாவை சற்று நேரம் கவனித்துப் பார்த்த பின், சைலஜாவின் சிறு குழந்தை "பெரியம்மா" என்று சொல்லி கமலாவை அழைத்தது—அது அப்படி அழைத்தது கமலா "பிது"வை ஒத்திருந்ததைக் கண்டு அல்ல; யாரைக் கண்டாலும் இளம் வயது பெண்டீரானால் அந்தக் குழந்தை பெரியம்மா என்று அழைப்பது வழக்கம். கமலா உடனே அந்தச் சிறுமியைத் தன் மடிமேல் எடுத்து வைத்துக் கொண்டாள்.

ஹரிபாவினி தன் மகளுக்குக் கமலாவை அறிவிப்பவளாய்; "இவள் புருஷன் வக்கீலாம்; மேனாட்டில் வேலையாயிருக்க வேண்டுமென்று வரும் போது உன் அப்பாவைச் சந்திக்கவே, அவர் இவர்களை இங்கே அழைத்து வந்திருக்கிறார்" என்று சொன்னாள்.

அந்தப் பெண்கள் இருவர் கண்களும் சந்தித்தன. அந்தப் பார்வையிலேயே அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பராய் விட்டனர்.

வந்த விருந்தாளிகளுக்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொடுக்க ஹரிபாவினி உள்ளே போகவே, சைலஜா கமலாவைக் கையைப் பிடித்து அழைத்து தன் அறைக்குக் கூட்டிச் சென்றாள்.

சற்றுமுன், ஒருவருக்கொருவர் அந்தரங்கமாய் பேசலாயினர்; அவர்கள் இருவருக்கும் வயதில் வித்தியாசம் இருந்தும் தெரியவில்லை. தன் வயதுப் பெண்கள் போலல்லாது மனோபாவங்கள் சூக்ஷ்மமாகவும், விசாலித்தும் இருந்தன கமலாவுக்கு; மாமியாரின் கட்டுப்பாட்டிற்கு அட

ங்கி இருக்க நேரிடாமல் சுயேச்சையாய் இருந்ததால் "வாயைமூடு," "நான் சொல்வதைச் செய்," "சிறு பெண்கள் என்றால் 'மாட்டேன்' என்று சொல்லலாமோ" என்ற வாக்கியங்கள் அவளுடைய காதில் இடிபடவில்லை; ஆகவே, நிமிர்ந்து தலைதூக்கி, பலத்த, அடித்தண்டையுடைய அழகிய செடி போன்று உலகை உல்லாசமாய் எதிர்த்து நின்றாள் கமலா.

புதிதாய் கண்டு கொண்ட இவ்விரண்டு பெண்களும் சம்பாஷணையில் ஆழ்ந்தனர். சிறுமி "உமை" தன்னைக் கவனிக்க வேண்டுமென்று முயன்று, செய்த பிரயத்னமெல்லாம் வீணாயின. பேசுவதில் தான் கீழ்ப்பட்டவளே என்பது கமலாவிற்குப் புலப்பட்டது. எவ்வளவு சமாசாரம் இருக்கிறது சைலஜா சொல்வதற்கு; தனக்கோ சமாசாரம் அநேகமாய் ஒன்றுமே யில்லையே, கமலா தன் இல்லற வாழ்க்கையைப் பற்றிப் பேசியது அரை குறையாய் "பென்ஸில்" இல் வரையப்பட்டு வர்ணங்களால் எழுதப்படாத படம் போன்றிருந்தது.

இதுவரை தன் இல்லற வாழ்க்கை பொருள் குன்றியிருந்ததை அவள் நன்குணரவில்லை; ஏதோ குறைவு இருக்கிறது என்ற இயற்கையாய் உண்டான உணர்ச்சி மட்டும் இருந்து அவள் மனதை அடங்க வொட்டாமலிருக்கச் செய்ததே யொழிய என்ன குறை என்ற விபரம் அவளுக்குத் தெளிவாய் தெரியாமல் இருந்தது.

பேச்சுத் தொடங்கும்போதே சைலஜா தன் கணவனைப்பற்றிப் பேசலாயினள்; அவளுக்கு அந்தரங்கமான அந்தத் "தந்தி"யைத் தொடவேண்டியது தான் தாமதம்; உடன் "ஒலிக்கத் தொடங்கும்; ஆனால் கமலாவுக்கோ அந்தத் "தந்தி"யில் வாசிக்கத் தெரியாது, தன் கணவனைப்பற்றிப் பேச விஷயமும் இல்லை. அவளுக்கு மனமும் இல்லை.

ஆனந்த மயமான பொருட்களால் நிறைந்த சைலஜாவின் கப்பல் கால நதியில் மெல்லெனப் போய்க் கொண்டிருக்க, கமலாவின் காலிக் கப்பல் மட்டும் மணற்றிடலிற் சிக்கித் திண்டாடியது.

சைலஜாவின் கணவனான 'விபினன்' காஸிப்பூரிலுள்ள கஞ்சா இயந்திர சாலையில் வேலையாய் அமர்ந்திருந்தான். சக்கிரவர்த்திக்கு இரண்டே பெண்கள். மூத்தவள் தன் கணவனது வீட்டிற்குப் போய் குடியிருக்கவே, இளையவளினின்றும் பிரிந்து தனியே இருக்கச் சகியாத அந்தக் கிழவர், அவருடைய சாமர்த்தியத்தால் சம்பாதித்துக் கொடுத்த வேலையில் அமர்ந்து, மனைவி வீட்டாருடன் இருக்கச் சம்மதிக்கும்படியான ஒரு ஏழைச் சிறுவனை அவளுக்குக் கணவனாகத் தேர்ந்தெடுத்திருந்தார்.

சைலஜா திடீரென பேச்சை நிறுத்திவிட்டு "சற்று இரு, அம்மா, இதோவந்து விடுகிறேன்" என்று, பிறகு தன் கௌரவத்தைக் காட்டுபவளாய் கணவன் ஸ்நானம் செய்து தயாராக இருக்கிறார், சாதம் போடவேண்டும், கச்சேரிக்கு நாழிகையாகிறது என்பதை கமலாவிடம் தெரிவிக்கவே, ஒன்றுமறியாத கமலா "அவர் வந்துவிட்டார் என்று உனக்கு எப்படித் தெரிந்தது" என்று கேட்டாள். "என்ன பரிகாசம் செய்கிறாய்?" என்றாள் சைலஜா "எப்படித் தெரியுமா? கணவன் காலடி கூடவா தெரியாது?" என்று சிரித்துக்கொண்டே கமலாவின் கன்னத்தைக் கிள்ளி, கொத்துச்சாவி கட்டித் தொங்கும் புடவைத் தலைப்பை முதுகின் மேல் இழுத்து மறைத்துக்கொண்டு, 'உமை' யை தூக்கிக்கொண்டு அறையைவிட்டு அகன்றாள்.

காலடியின் குறிப்பை உணர்வது அவ்வளவு சுலபமான காரியம் என்று கமலாவுக்குத் தெரியாது; யோசனையில் ஆழ்ந்து ஜன்னல் வழியே வெளியே நோக்கினாள். வெளியே கொய்யாமரம் ஒன்று இருந்தது; பூத்திருந்த அதன் கிளைகளில் கொள்ளை கொள்ளும் வண்டுகள் ரீங்கரித்தன.

பாரதநாட்டின் நிலைமை.

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கைவளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்புமற்று, பரிகாசத்துக்கிடமாய்விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குறலிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர்பதம்பெற்று ஒப்புயர்வுற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பாரக்கக்காணலாம். ராஜீயவிஷயததில் உயர்நிலைமையெய்துமுன், செல்வநிலையில் உயர்நில எய்த முனையவேண்டும். ஆதலின் தேசச்செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து, தேசத்தொழிலை விருத்திசெய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச்சிறப்புற்று சுகவாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனையவேண்டுமென்பதே இந் நூலின் நோக்கமாகும்.

விலை ரூ. 1—0—0

கணேஷ் கம்பெனி,
39, தம்புசெட்டி தெரு, சென்னை.

இனும்! இனும்!!

ஒவ்வொரு பக்கமும்
சரீர சுகத்தைப்பற்றி
போதிக்கிற தென்பதை
நமது

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தைப் படிப்பதால் அறியலாம், தேகத்தைப் பாதுகாப்பதற்கு அனுபவத்துக்கு ஒத்துள்ள நீதி வாக்கியங்கள் நிறைந்து கிடக்கின்றன.

உங்கள் விலாசத்தை தெரிவித்தால் தபாற் செலவின்றி இனமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
தபால் பெட்டி நெ. 1252,
26, பிராட்வே, மதராஸ்.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!

அமர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், சீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

ஜனரஞ்சனி.

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் பத்திரிகை. தமிழ் இலக்கியம் தேச சரித்ரம், சாஸ்த்ரங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நாவல்கள், சிறு கதைகள், ஹாஸ்யங்கள், விநோதவிஷயங்கள் முதலிய வாசிக்க ரஸமானபல வியாஸங்கள் அடங்கியது.

வருஷ சந்தா ரூபாய்	2	0	0
மேல் நாடுகளுக்கு ரூபாய்	3	0	0
மாதிரிப்பிரதி அணா	0	2	0

"ஜனரஞ்சனி" ஆபீஸ்,
4, கொண்டிசெட்டி தெரு மதராஸ்

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras

(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டார் யாவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராக நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ. 1000 பாலிஸிக்கு ரூ 15 வீதம் சந்தாதாரர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
MANAGER.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மொரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் போதுமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	× 25"	ரூ. $2\frac{1}{2}$ முதல்	ரூ. 3 வரை
„ 2.	12 „	× 27"	„ 4	„ 6 „
„ 3.	16 „	× 34"	„ 6	„ 9 „
„ 4.	18 „	× 36"	„ 8	„ 12 „
„ 5.	20 „	× 41"	„ 11	„ 13 „

வெளுக்கப்படாத கதர உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: 'Shree.'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ. $4\frac{1}{2}$ முதல்	ரூ. 6 வரை
$9\frac{1}{2}$ „	× 40"	„ 3 „	5 „
3 „	× $1\frac{1}{2}$ கஜ	„ 2 „	3 „

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக் கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

ஒற்றுமை.

(நான்காம் வருடம்.)

இது இந்திய மக்களிடம், சகோதர நட்பு, சமரச உணர்ச்சி, ஜீவகாருண்யம், உயர்தர அறிவு நற்குண நல்லொழுக்கத்தைப் போதிக்கும் விஷயங்கள், நாவல்கள், சரித்திரங்கள் முதலியன அடங்கிய ஒரு மாதாந்தரப் பத்திரிகை.

வருஷச் சந்தா முன் பணம் அனுப்புவோருக்கு அணா 12.

ஜீவிய சந்தா ரூபாய் 10-0-0.

வி. பி. மூலமாய் பெறுவோருக்கு ரூ. 1
வெளி நாட்டுக்கு ரூ. 1-8-0.

பி. வி. கண்ணன் அண்டு கோ.
சைதாப்பேட்டை சென்னை.

லக்ஷ்மிகாந்த கஸ்தூரி மாத்திரை.

இஃது சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களில் ஒன்று மிக்க அருமையான மருந்துகளால் முடிவு பெற்று வாய்வு, பித்த சிலேஷ்மத்தை அனுசரித்து வியாதிகளுக்கு தனியாக அல்லது தாம்பூலத்திலாவது உபயோகிக்க தகுந்த சஞ்சீவி.

சுமார் 200 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6.
டஜன் 1-க்கு விலை ரூ. 4.

ஸ்ரீ நடராஜ ஔஷத சாலை.
55, Narayana Mudali, Street,
G. T. MADRAS.